# உடன்பிறப்பே... 16

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த எஸ்.எஸ்.தென்னரசு அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# எஸ்.எஸ்.தென்னரசு: கழகத்தின் சின்னமருது!



ஓவியம் : ரவி பேலட்

**1964**-ஆம் ஆண்டு உடன்பிறப்புகள் கொண்டாடும் செப்டம்பர் மாதத்தில், மொழி உரிமையைக் காக்க, அரசியல் சட்டத்தின் மொழிப்பிரிவை எரித்துப் போராடுவதற்கான அறிவிப்பை வெளியிட்டது கழகம். தன்மானம் மிக்கக் கழக உடன்பிறப்புகள் சிறைக்கு அஞ்சாது போராட்டக்களம் வந்தனர்.

அதன் பகுதியாக, சிறப்பான ஒரு போராட்டம் அன்றைய இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் காந்தி சிலை முன்பு, செப்டம்பர் 6-ஆம் தேதி மாலை 4.20 மணிக்கு நடந்தேறிக் கொண்டிருந்தது. ஆயிரக்கணக்கான கழகத்தினருக்கு நடுவே, கைது செய்யக் காத்திருந்த காவலர்களுக்கு முன்பாக அரசியல் சட்டத்தின் மொழிப்பிரிவைத் தீயிட்டுக் கொளுத்தி, “அண்ணா வாழ்க! இந்தி வீழ்க!” என உணர்ச்சி முழக்கமிட்டார் ஒரு கொள்கை வீரர்.

அந்தத் தீரம் மிக்கச் செயல்வீரரை கைது செய்து சிறையில் அடைத்தனர். அப்போது அந்தக் கொள்கை வீரரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தீப்பெட்டியில் கூட அண்ணாவின் படம்தான் பொறிக்கப்பட்டிருந்தது. தீப்பெட்டியிலும் அண்ணா படத்துடன் போராட்டக் களம் வந்த அந்த அண்ணாவின் தம்பி, கலைஞரின் உடன்பிறப்புதான் **‘சிறுகதை மன்னர்’ எஸ்.எஸ்.தென்னரசு.**

## அண்ணாவுடன் முதல் சந்திப்பு

சிவகங்கை அருகே உள்ள திருக்கோட்டியூரில் 1929-ஆம் ஆண்டு பிப்ரவரி 20-ஆம் நாள், சொக்கலிங்கம் - தங்கழகு தம்பதியருக்குப் பிறந்தார் தென்னரசு. இளம் வயதிலேயே அவருக்கான இலக்கிய ஆர்வமும், அரசியல் ஆர்வமும் துளிர் விடத் தொடங்கின. அதற்குக் காரணமாக அமைந்தன பேரறிஞர் அண்ணாவுடனான சந்திப்புகள்.

1947-ஆம் ஆண்டு சிவகங்கையில் உள்ள இராமச்சந்திரனார் பூங்காவைத் திறப்பதற்காக வருகை தந்திருந்தார் பேரறிஞர் அண்ணா. அவ்விழாவில் பள்ளி மாணவனாகக் கலந்துகொள்ளச் சென்றிருந்த தென்னரசு, முதல் முறையாக தமிழினத்தின் தலைமகனைக் கண்டார். பார்த்தது மட்டுமல்ல, முதல்முறையாக அங்குதான் அண்ணாவினுடைய பேச்சையும் கேட்டார்.

அதனைத் தொடர்ந்து 1948-இல் மதுரையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசினார் பேரறிஞர். அந்தப் பேச்சும் இயக்கத்தை நோக்கி தென்னரசை இழுத்தது. அந்தக் கணம் முதல் அண்ணாவின் கொள்கைத் தம்பியாக மாறி, திராவிட வீரராகச் செயலாற்றத் தொடங்கினார் தென்னரசு.

## கலைஞர் பரிந்துரை

மாணவப் பருவம் முதலே அண்ணாவைத் தலைவராக ஏற்றுச் செயல்படத் தொடங்கிய தென்னரசுக்கு கலைஞரை முதன்முதலில் அறிமுகம் செய்து வைத்தவர் கண்ணதாசன். 1952-இல் சிறுகூடல்பட்டியில் கழக நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு, மதுரை திரும்பிக் கொண்டிருந்த கலைஞரிடம் திருக்கோட்டியூரில் தென்னரசை அறிமுகம் செய்து வைத்தார் கண்ணதாசன். அப்போது தென்னரசு அவர்களின் பெயர் சிந்தாமணி என்பதுதான்.

முதல் சந்திப்பில், தான் எழுதிய சிறுகதை ஒன்றை கலைஞரிடம் வழங்கினார் தென்னரசு.

அந்தக் கதையைப் படித்த கலைஞர், கழக முன்னோடி என்.வி.என் அவர்கள் நடத்தி வந்த ‘திராவிடன்’ இதழில் பரிந்துரைத்து, தென்னரசு அவர்களுக்குப் பணி வாங்கித் தந்தார். அதனைத் தொடர்ந்து முத்தமிழறிஞரின் மூத்த பிள்ளையாம் ‘முரசொலி’, ‘திராவிட நாடு’, ‘தென்றல்’ ஆகியவற்றில் தன் இதழியல் பணிகளைத் தொடர்ந்தார்.

## கலைஞர் வைத்த பெயர்

கலைஞர் அவர்களுடன் இணைந்து கழகப் பணியாற்றி வந்தவர், ‘சிந்தாமணி’ என்கிற தனது பெயரை மாற்ற வேண்டும் என்கின்ற ஆர்வத்தை, கலைஞரிடம் வெளிப்படுத்தினார். ‘தென்னரசு’ எனப் பெயர் சூட்டி அவர் வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்தினார் கலைஞர்.

> **‘சிந்தாமணி’ என்கிற தனது பெயரை மாற்ற வேண்டும் என்கின்ற ஆர்வத்தை, கலைஞரிடம் வெளிப்படுத்தினார். ‘தென்னரசு’ எனப் பெயர் சூட்டி அவர் வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்தினார் கலைஞர்.**

அது குறித்து, தென்னரசு இல்ல விழா ஒன்றில் பேசும்போது, “தென் பகுதிக்கெல்லாம் ஒரு காலத்தில் அவர் அரசாக வருவார் என்று நான் எண்ணிய காரணத்தால் அன்றைக்கே அவருக்கு தென்னரசு என்ற பெயரை நான்தான் சூட்டினேன்” என உரையாற்றினார்.

## செயல்வீரர், சிறுகதை மன்னர்

கழகம் ஆரம்பிக்கப்பட்ட 1949-இல் கிளைச் செயலாளராகத் தன் அரசியல் பயணத்தைத் தொடங்கிய தென்னரசு, அன்றைய ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்தின் செயலாளராக 15 ஆண்டுகள் உழைத்து, கழகத்தின் வளர்ச்சியை உறுதி செய்தார். கழக நடவடிக்கைகள் செயல்பாடுகள் மீது, அவர் கொண்டிருந்த நுணுக்கமான அரசியல் அறிவும் அனுபவமும் பிற்காலத்தில் அவரை கழகத்தின் அமைப்புச் செயலாளராக உயர்த்தின.

அவரின் ஆகச்சிறந்த மொழிநடையும், தெளிவு மிக்கக் கொள்கைப் பேச்சும் அரசியல் களத்தில் அவருக்கான சிறந்த ஆயுதமாக அமைந்தன. இந்தத் திறமைகளை, தான் சார்ந்த இயக்கத்தின் கொள்கைகளைக் கொண்டுசேர்க்கப் பயன்படுத்தினார் தென்னரசு. அரசியல் தளத்தில் இயங்கியதோடு புனைவு இலக்கியத்திலும் சிறந்து விளங்கியவர் தென்னரசு.

**‘செம்மாதுளை’**, **‘அவள் ஒரு கர்நாடகம்’**, **‘பாடகி’** என அவர் எழுதிய புனைவுகள் வழியாக, தமிழ் இலக்கியத்தில் அவருக்கான இடத்தை உறுதிசெய்தார். இவர் எழுதிய **‘செம்மாதுளை’** எனும் நூலைத் தழுவி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் **‘தென்பாண்டிச் சிங்கம்’** என்கிற புதினத்தை உருவாக்கி, தமிழுக்குச் செழுமை சேர்த்தார்.

தென்னரசு அவர்கள் அரசியல் கட்சியில் இருக்கிறார் என்பதற்காகவே, அவருடைய எழுத்து களைப் புறக்கணித்தவர் உண்டு. உள்நோக்கத்தோடு ஆயிரம் பேர் புறக்கணித்தாலும் அவர்தான் தமிழ் இலக்கியத்தின் **‘சிறுகதை மன்னர்’** என்பதையும், தமிழுக்கு அவர் அளித்த திராவிட இயக்கத்தின் இலக்கியப் பங்களிப்பையும் எவராலும் மறைக்க முடியாது.

## சிறைப்பறவை சின்னமருது

உரிமை காக்கும் போராட்டத்தில் சிறைச் சாலையை, பாடசாலையாக மாற்றி, வைரம் போல பட்டைத் தீட்டி வளர்ந்த இயக்கம் தி.மு. கழகம். அதிகம் படித்து முதல் மதிப்பெண் எடுக்கும் மாணவனைப் போல 26 முறை சிறை சென்றவர் தென்னரசு. அந்தத் தியாகத்தால் அவரைச் **‘சிறைப்பறவை’** என அழைத்தனர் கழகத்தினர்.

கழகம் நடத்திய விலைவாசி உயர்வு, மொழி உரிமைப் போராட்டங்களில் கலந்துகொண்டு கைதானவர், நெருக்கடி நிலை காலத்தில் மிசா கைதியாக ஒன்றரை ஆண்டு காலம் கடுங்காவல் தண்டனையை அனுபவித்தார். தன் சிறை அனுபவங்களை எல்லாம் தொகுத்து **‘பெண்ணில்லாத ஊரிலே’** எனும் புத்தகமாகவும் வெளியிட்டார். இது கழகப் போராட்ட வரலாற்றின் நேரடி சாட்சியமாகும்.

அந்த ‘சிறைப்பறவை’யின் நீண்ட நெடும் கழகப் பணிக்கான அங்கீகாரமாக அவரைத் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கி அழகு பார்த்தார் கலைஞர். பிறகு, 1989 ஆம் ஆண்டுத் தேர்தலில் திருப்பத்தூர் தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பை வழங்கினார் கலைஞர். கழகத்தின் ‘சின்ன மருது’வாக விளங்கிய தென்னரசு அவர்களின் வெற்றியை உறுதி செய்து சட்டப்பேரவைக்கு அனுப்பி வைத்தனர் திருப்பத்தூர் மக்கள்.

சின்ன மருதாக, சிறுகதை மன்னராக, சிறைப் பறவையாக என... சிறைச்சாலைகள், இலக்கியம் ததும்பும் மேடைகள், சட்டப்பேரவை எங்கும் கழகத்தின் குரலாய் ஒலித்து, தென்னாட்டின் சிங்கமாகக் கழகம் வளர்த்த தென்னரசு அவர்கள் 1991-ஆம் ஆண்டு ஏப்ரல் 13-ஆம் தேதி மறைந்தார்.

உடல் மறையலாம்.. ஆனால், தென்னரசு அவர்களின் உழைப்பும் புகழும் என்றும் நிலைத்திருக்கும்.

**...துடிக்கும்**

---

## அதிகரிக்கும் அசமத்துவம்!

அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் ‘Tn Talk’ என்கிற நிகழ்வு மாதம் தோறும் நடைபெற்று வருகிறது. அண்ணல் அம்பேத்கர், பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் முன்னெடுத்த சமூக சமத்துவச் செயல்திட்டங்கள் குறித்து இந்த நிகழ்வில் பேசப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னர் நடந்த நிகழ்வுகளில் சுயாதீன ஊடகர் பி.சாய்நாத், ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் ‘சூரஜ் எங்டே’ என பலரும் சிறப்பு அழைப்பாளராக வருகை தந்துள்ளனர்.

சனாதனமும் சாதியமும் பீடித்திருக்கும் இந்திய சமூகத்தில் முதலாளித்துவமும் மக்களுக்கு இடையிலான அசமத்துவத்தை அதிகரிக்கிறது. குறிப்பாக, கடந்த பத்தாண்டுகளில் இந்தப் போக்கு அதிகரித்திருக்கிறது. ஒருபுறம் மூன்று வேளை உணவே கிடைக்காத அளவுக்குத் தனி நபர் ஏழ்மை உயர்ந்துள்ளது. இன்னொருபுறம் ஒரு நாளைக்குச் சராசரியாக 70 லட்சாதிபதிகள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். பொதுத் துறை நிறுவனங்கள் தனியார்மயம் என்ற பெயரில், அரசு வளங்களை அம்பானி, அதானி போன்ற தனிநபர்களுக்கு அரசு தாரைவார்த்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையிலிருந்து மீள நீண்ட கால நோக்கில் செயல்படும் வகையில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் பற்றி சிந்திக்க இது போன்ற நிகழ்வுகளும் உரைகளும் துணைபுரியும். தமிழ்நாட்டில் சமூக சமத்துவத்தை திராவிட மாடல் அரசு உறுதியாகப் பற்றி நிற்கும் வேளையில் அரசியல் பயில்வதற்காக மாணவர்களும் இந்த நிகழ்வுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## :ப்ளாஷ்பேக்



### அண்ணாவுடன் புகைப்படம்!

1924 ஆம் ஆண்டு வடக்கனந்தல் என்ற குக்கிராமத்தில் பிறந்து பெரியார், அண்ணாவின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு திறம்படச் செயல்பட்டவர், என் தாத்தா மாரியப்பனார்.



கரிகாலன்

பேரறிஞர் அண்ணாவின் நேரடி அன்பைப் பெற்ற அவர் தென்னாற்காடு மாவட்ட தொண்டர் படைத் தலைவராக விளங்கினார். அண்ணா முதலமைச்சராகப் பொறுப் பேற்ற பிறகு, வடக்கனந்தல் கிராமத்தில் உள்ள எங்கள் வீட்டுக்கு வருகை தந்தார். அப்போது என் தாத்தா, பாட்டி, அப்பா, அத்தை ஆகியோர் அண்ணாவுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். தாத்தாவின் மகன் மகள்களுக்கு, சிதம்பரம், தமிழ்ச்செல்வி, ராணி என்ற பெயர்களையும் அண்ணாதான் வைத்தாராம். தாத்தாவின் வழியில், இன்றளவும் கழகப்பணி ஆற்றுவது நிம்மதி அளிக்கிறது.

**-சி.கரிகாலன், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர், வடக்கனந்தல் பேரூர், கள்ளக்குறிச்சி.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### தூக்கு மேடை!

**1946-ஆம் ஆண்டு, கலைஞரின் ‘தூக்குமேடை’ நாடகம் தஞ்சாவூரில் அரங்கேற்றப்பட்டது. அந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் ‘பட்டுக்கோட்டை அஞ்சா நெஞ்சன்’ அழகிரிசாமி அவர்கள். பகுத்தறிவுப் பிரச்சார நாடகம் ஒன்றை தனக்கு எழுதித் தர வேண்டும் என்றும், அதில் கலைஞரும் நடிக்க வேண்டும் எனவும் நடிகவேள் எம்.ஆர்.ராதா கேட்டுக் கொண்டதன் பேரில் அந்த நாடகத்தை எழுதினார் கலைஞர். பல வாரங்கள் தொடர்ந்து நடைபெற்ற அந்த நாடகம், பகுத்தறிவுப் புரட்சி அலைகளை உருவாக்கியது.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 193




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.